**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.14/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **இளையராஜா** |
| Father's / Husband Name | : | **தங்கராஜ்** |
| Address | : | **அரணாரை** |
| Age | : | 35/2025 |

**தேதி : 13.08.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அரணாரையில் வசித்து வருகிறேன். நான் பி.ஏ. ஆங்கிலம் படித்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.12.2023 அன்று காலை 10.30 மணி அளவில் செஞ்சேரியில் உள்ள எனது வயலுக்கு சென்றேன். அப்போது எதிரி இங்கே எதற்கு வருகிறாய் நொண்டிபயலே என்று சொல்லி திட்டினார். மேலும் தகாத வார்த்தைகளால் திட்டி கட்டையால் என்னை அடித்தார். என்னை கீழே தள்ளி காலால் எட்டி உதைத்து எனது வயலுக்கு வந்தால் கொல்லாமல்விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டினார். பிறகு காயம்பட்ட நான் எனது அம்மா உதவியுடன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். பிறகு இதுசம்மந்தமாக பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

பெரம்பலூருக்கும், அரணாரைக்கும் இரண்டு கி.மீ. தூரம் இருக்கும். நானும்,எனது தாயாரும் பெரம்பலூருக்கு மருத்துவரை பார்க்க வந்தோம். அரசு மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள மருத்துவர் அரவிந்த் என்ற மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவர் அரவிந்த் பெரம்பலூரில்தான் உள்ளார். மருத்துவர் அரவிந்த் மருத்துவமனைக்கு எதிரே அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று நான் சிகிச்சை பெற முயற்சி செய்யவில்லை. சம்பவம் என்னுடைய வயலில் நடைபெற்றது. என்னுடன் பங்காளிகளுக்கு சொந்தமான கூட்டு கிணறு அங்கு உள்ளது என்றால் சரிதான். அந்த கூட்டு கிணரை சுற்றி ஒரு 15 செண்ட் பொது இடம் இருக்கும். அந்த பொதுஇடத்திற்கு தென்புறமாக என்னுடைய இடம் உள்ளது என்றால் சரிதான்.

அந்த பொதுஇடத்திற்கு தென்புறம் உள்ள என்னுடைய வயலில் தகராறு நடைபெற்றது. பாப்பா, அசோகரத்தினம், முத்துகண்ணு ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். 20.12.2023 அன்று காலையிலேயே சண்முகம் உதவி ஆய்வாளரிடம் புகாரை நான் கொடுத்தேன். மேற்படி புகாரை பெரம்பலூர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேனா என்றால் ஆமாம். புகாரை நான் என் கைப்பட எழுதினேன். நான் எழுதிய கொடுத்திய புகாரில் எனக்கு கட்டையால் எங்கு அடிப்பட்டது, அதனால் என்ன விளைவு ஏற்பட்டது என்பதை பற்றிய விவரத்தை புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் நான் இந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை தகாத வார்த்தையால் திட்டியதை புகாரிலும், போலீஸார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி என்னை அடித்ததால் என்ன காயம் ஏற்பட்டது என்றால் வலது தொடையில் என்னை அடித்ததால் வீக்கம் ஏற்பட்டு இரத்தகாயம் ஏற்பட்டது. நான் சிகிச்சை பெற்ற மருத்துவரிடம் சான்றிதழ் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் நான் எந்த தேதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கட்டை கடந்தது பின்னர் எதிரி அதை தூக்கி எறிந்துவிட்டார். நான் சொல்வதுபோல் எதிரி கட்டையால் தாக்கவில்லை என்றாலும், என்னை கீழே தள்ளிவிட்டார் என்றாலும், என்னை தகாதவார்த்தையால் திட்டினார் என்றாலும், என்னை கொலைமிரட்டல் விடுத்தார் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. மேற்படி கிணறு 8 பேருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் தண்ணீர் எடுப்பது யார் முதலில் வருகிறார்களோ அவர்கள்தான் முதலில் எடுப்பது எங்களுக்குள் பேசப்பட்ட ஒப்பந்தம் ஆகும். அந்த 8 நபர்களில் ஆஜர் எதிரி கலைவாணன் ஒரு பங்குதாரர் என்றால் சரிதான்.

நான் மற்றவர்கள் தண்ணீர் எடுக்க செல்லும்போது வீண் வம்பு சண்டை செய்து தண்ணீர் எடுக்காமல் தடுத்து நானே தண்ணீர் எடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தடுத்ததால் எதிரி உள்ளிட்ட மற்ற பாகஸ்தர்கள் என்னிடத்தில் வந்து ஒப்பந்தத்தை மீறுவதாக கேட்டதால் அவர்கள் மீது முன்விரோதம் கொண்டு அவர்களை அடக்க வேண்டுமென்பதால் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுபோன்ற சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் உண்மை என்றால் நான் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று அதன்மருத்துவ சான்றை போலீஸாரிடம் கொடுத்து வழக்கு போட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அதை மறைப்பதற்காக நான் தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டு அதனுடைய மருத்துவ சான்றை போலீஸார் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த காரணத்திற்காக என்னை தாக்கினார் என்ற நோக்கத்தை எனது புகாரிலோ, போலீஸார் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால்

சரியல்ல. நான் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.